19.06.2025

OS.No. 540/2019

வா.சா.1 திரு. கணேசன், த/பெ. கருப்பையா

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்குச் சொத்து யார் கிரையம் வாங்கியது என்றால் எனது தகப்பனார் கருப்பையா தாவா வழக்குச் சொத்தில் 5 சென்டை கிரையம் வாங்கினார். எனது தகப்பனார் மேற்படி சொத்தை யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் மறவமங்கலத்தை சேர்ந்த காளிமுத்து என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். தாவா சொத்தை எனது தந்தை கிரையம் பெற்றதற்கு பின்பு போய் பார்த்தாரா என்றால் மேற்படி கிரையச் சொத்தை முள்வேலி போட்டு அடைத்து வைத்திருந்தார். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2010ம் வருடம் இறந்தார். எனது தந்தை இறந்தபிறகு தாவா சொத்தை போய் பார்த்தோமா என்றால் போய் பார்த்தோம் 1ம் பிரதிவாதி வளர்மதி தாவா சொத்தை அடைத்து வைத்திருந்தார். எனது தந்தைக்கு மேற்படி சொத்தை கிரையம் கொடுத்த காளிமுத்து 1ம் பிரதிவாதி வளர்மதியின் தந்தை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் திருவாயி என்றால் சரிதான். தாவா சொத்தை எனது தகப்பனார் கிரையம் பெற்ற காலத்தில் காளிமுத்து பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தினை எனது தகப்பனார் கிரையம் பெற்ற பின்பு மேற்படி கிரையதாரரான காளிமுத்து 2005ம் வருடம் இறக்கும்வரை காளிமுத்து பெயரில் தான் தாவா சொத்திற்கு பட்டா இருந்தது என்றால் இல்லை, எங்கள் பெயரில் இருந்தது. மேற்சொன்ன எங்களது பெயரில் இருந்ததாக சொல்லும் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் சொல்வது போன்று பட்டா ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தாயார் திருவாயி, 1ம் பிரதிவாதிக்கு தாவா மொத்த சொத்தையும் இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாக சொல்லிக்கொண்டார்களா என்றால் சொல்லிக்கொண்டார்கள். மேற்படி இனாம் எழுதி கொடுத்தது சம்மந்தமாக புகார்

எதுவும் நான் கொடுத்தேனா என்றால் காளையார்கோவில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். யார் புகார் கொடுத்தது என்றால் 1ம் வாதி முத்துராமலிங்கம் புகார் கொடுத்தார். மேற்படி புகார் மனு விசாரணை அடிப்படையிலேயே முடித்துவைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கில் 8ம் வாதி ஷாஜகான் என்ன வேலை பார்க்கிறார் என்றால் காளையார்கோவிலில் பத்திர எழுத்தராக வேலை பார்க்கிறார். 8ம் வாதியின் ஏற்பாட்டில் தான் எனது தந்தை தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்றால் எனது அப்பாவிற்கு தான் அது தெரியும். 2010ம் வருடத்திற்கு பின்பு என்னைப் போல் மற்ற வாதிகளும் தாவா இடத்திற்கு போகவில்லை என்றால் சரிதான். வாதிகள் ஒவ்வொருவரும் பக்கத்து பக்கத்து ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல, ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். தாவா சொத்தானது 36 நபர்களால் கிரையம் பெற்றதில் அனைவரும் வழக்கிற்கு வரவில்லை என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தை எனது அப்பா மற்றும் மற்ற நபர்கள் மோசடியாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், காளிமுத்து மேற்படி கிரையத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காளிமுத்துவின் தம்பி யார் என்றால் செங்கொடி ஆவார். காளிமுத்து வராமல் செங்கொடியின் ஏற்பாட்டின் பேரில் தாவா சொத்தை நாங்கள் கிரையம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தினை கிரையம் பெற்ற மற்ற நபர்கள் அதனால் தாவா வழக்கில் தரப்பினர்களாக வரவில்லை என்றால் சரியல்ல. மலைக்கண்ணு மகன் ராமலிங்கத்திற்கு 22.07.1984ம் தேதியில் மேற்சொன்ன காளிமுத்து 84 சென்ட் இடத்தை கிரையம் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வளர்மதி தாவா சொத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து தற்போது தாவா சொத்தை 2, 3 பிரதிவாதிகள் அடைத்து வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தற்போதும் காளிமுத்துவின் மனைவி திருவாயியின் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. காளிமுத்து எனது தகப்பனாருக்கோ, மற்ற வாதிகளுக்கோ தாவா சொத்தை கிரையம் செய்து

கொடுக்கவில்லை என்றும், நாங்கள் மோசடியாக கிரையப்பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்பதால் தாவா சொத்தைப் பொறுத்து நாங்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.06.19 17:30:04 +0530